யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | புவியியல் - II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :-

- இவ்வினாத்தாள் பகுதி I, II என இரு பகுதிகளை உடையது.
- ஒவ்வொரு பகுதியிலுமிருந்து குறைந்தது இரு வினாக்கள் வீதம் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- உலகப்படம், இலங்கைப்படம் என்பன வழங்கப்படும்.

### பகுதி I - பௌதிகப் புவியியல்

1) (i) புவிநடுக்கம் என்பது யாது? பொருத்தமான விளக்கப்பட உதவியுடன் சுருக்கமாக விவரிக்க. (4 புள்ளி)

(ii) புவிநடுக்கத்தின் உருவாக்கத்திற்கான காரணங்களில் ஒன்றான புவியோட்டசைவு (Earth Movement) என்பதை வரையறை செய்து அதன் வகைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

(iii) புவியோட்டசைவினால் உருவாகும் நிலவுருவ வகைகளுள் ஒன்றான மடிப்புக்கள் மூன்றினைப் பெயரிட்டு விளக்கப்பட உதவியுடன் விளக்குக. (6 புள்ளி)

(iv) எரிமலை கக்குகையினால் (Volcanic Eruption) உருவாகும் எவையேனும் மூன்று நிலவுருவங்களை விளக்கப்படங்களின் துணையுடன் விளக்குக. (6 புள்ளி)

2) (i) இலங்கையின் பாறைகளை (Rocks) வலய அடிப்படையில் வகைப்படுத்திக்காட்டுக. (3 புள்ளி)

(ii) இலங்கைப் புறக்கோட்டுப் படமொன்றில் மூன்று பிரதான பாறை வலயங்களையும் எல்லைப்படுத்திப் பெயரிடுக. (3 புள்ளி)

(iii) நீர் பெயரிட்ட பாறைவலயங்களுள் எவையேனும் இரண்டினைத் தெரிந்து, அவற்றின் முதன்மையான பண்புகளை ஆராய்க. (7 புள்ளி)

(iv) இலங்கையின் வடபிரதேசத்திற் சுண்ணக்கற்பாறை வலயங்களின் கீழ்க் காணப்படும் தரைக்கீழ் நீர்வளமானது விரைவாக இழக்கப்பட்டு வருவதற்கான காரணங்களை ஆராய்க. (7 புள்ளி)

3) (i) காற்றின் செயன்முறைக்குக் காரணமாக அமையும் இருவகை வரண்ட பாலைவனங்களையும் பெயரிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக. (4 புள்ளி)

(ii) வரண்ட பாலைவனப் பரிதேசங்களில் எவ்வகை வானிலையாலழிதல் அதிகம் இடம்பெறுகின்றது எனக்கூறி, அச்செயன்முறையினைச் சுருக்கமாக விபரிக்க. (4 புள்ளி)

(iii) காற்றின் தின்னற் செயன்முறையினால் உருவாகும் எவையேனும் இரு நிலவுருவங்களையும், படிவு செய்தற் செயன்முறையினால் உருவாகும் எவையேனும் இரு நிலவுருவங்களையும் பெயரிடுக. (4 புள்ளி)

(iv) மேலே பிரிவு (iii) இல் நீர் பெயரிட்ட நிலவுருவங்களின் உருவாக்கத்தினைப் பொருத்தமான விளக்கப்படங்களின் துணையுடன் விளக்குக. (8 புள்ளி)

4) (i) சுண்ணக்கற்பிரதேசங்களில் இரசாயன வானிலையாலழிதற் செயன்முறைகளுள் எச்செயன்முறை அதிகம் இடம்பெறுகின்றது எனக்கூறி, அச்செயன்முறை பற்றிச் சிறுவிளக்கம் தருக. (3 புள்ளி)

(ii) சுண்ணக்கற்கள் பிரதேசங்களில் உருவாகும் காசித்து நிலவுருவங்கள் (Karst landforms) நான்கினைப் பெயரிட்டு எவையேனும் இரண்டின் உருவாக்கத்தைப் பொருத்தமான விளக்கப்படங்கள் மூலம் விளக்குக. (5 புள்ளி)

(iii) காலநிலை மாற்றம் காரணமாக அயனக் கடற்கரையோரங்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை மூன்று எடுத்துக்காட்டுக்கள் ஊடாக விவரிக்க (6 புள்ளி)

(iv) மத்தியகோட்டையண்டிய Am (அயனமொன்சுன்) காலநிலைப் பிரதேசங்களில் காலநிலை மாற்றம் காரணமாக பிரதேசக் காலநிலை இயல்புகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை இரு காரணிகளின் உதவியுடன் ஆராய்க. (6 புள்ளி)

## பகுதி – II மானிடப் புவியியல்

5) (i) நகரக்குடியிருப்பு என்பது யாது? (2 புள்ளி)

(ii) நகரங்களை வரையறை செய்வதற்கு

a) குறைந்தபட்ச குடித்தொகை அளவுசார் கட்டளைவிதி

b) உயர்ந்தபட்ச குடித்தொகை அளவுசார் கட்டளை விதி என்பவற்றைப் பின்பற்றும் ஒவ்வொரு நாட்டைப் பெயரிட்டு, அந்நாடுகள் அவ்விதிகளைப் பின்பற்றுவதற்கான அடிப்படைக் காரணம் ஒவ்வொன்றையும் பெயரிடுக. (4 புள்ளி)

(iii) நகரச்சேரிகள் மற்றும் தரங்குன்றிய வாழிடங்கள் அமைவதன் விளைவுகளை விவரிக்க (6 புள்ளி)

(iv) நகரச்சேரிகள் மற்றும் தரங்குன்றிய வாழிடங்களில் வாழ்வோரின் மேம்பாட்டிற்காக அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை ஆராய்க. (8 புள்ளி)

6) (i) பசுமைப்புரட்சி என்பதற்கு வரைவிலக்கணம் தருக. (2 புள்ளி)

(ii) பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து விவசாயத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட மரபணுத் தொழில் நுட்பத்தின் விளைவுகளைப் பரீசீலிக்க. (6 புள்ளி)

(iii) மரபணுத் தொழில்நுட்பத்தினால் விவசாய நிலப்பயன்பாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. விவசாய நிலப்பயன்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள ஏனைய காரணிகளை முன்வைக்க. (6 புள்ளி)

(iv) விவசாய நிலப் பயன்பாட்டில் இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் பாற்பண்ணைத் தொழிலிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தி உள்ளது. இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (6 புள்ளி)

7) (i) உலகில் உயர்தொழில்நுட்பக் கைத்தொழிலுக்கு முதன்மை வாய்ந்த ஆறு நாடுகளைப் புறவுலகப் படத்தில் குறித்துப் பெயரிடுக. (3 புள்ளி)

(ii) ஐக்கிய அமெரிக்கா அல்லது யப்பான் உயர்தொழில்நுட்பக் கைத்தொழிலில் சிறப்பிடம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணிகளை ஆராய்க. (5 புள்ளி)

(iii) உலகின் பெரும்பாலான உயர்தொழில்நுட்பத்தொழில் வலயங்கள் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களை அண்டியே இடநிலையப்படுத்தப்பட்டுள்ளன. காரணங்காட்டி விவரிக்க. (6 புள்ளி)

(iv) உலகில் கப்பல்கட்டும் தொழிலில் ஈடுபட்டு வரும் பாரம்பரிய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து வளர்முக நாடுகளின் கப்பல் உற்பத்தி மிகப் பெருமளவில் அதிகரித்துள்ளது. விளக்குக. (6 புள்ளி)

8) (i) கோளமயமாதல் என்பது யாது? (2 புள்ளி)

(ii) கோளமயமாதலினால் வளர்முக நாடுகள் எதிர்கொள்ளும் சவால் ஒன்றினையும், அதற்கான தீர்வு ஒன்றிணையும் பெயரிடுக. (4 புள்ளி)

(iii) கோளமயமாதலின் விளைவுகளைப் பட்டியற்படுத்துக. (6 புள்ளி)

(iv) "கோளமயமாதலினால் வடக்கு – தெற்கு நாடுகளுக்கு இடையிலான இடைவெளி விரிந்து செல்லும்". இக் கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? காரணங்காட்டி விளக்குக. (8 புள்ளி)